# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
## சட்டக் கற்கைகள் துறை


# சட்டமாணி கௌரவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் 2022/2023

| நிலையம் | ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகள் | மொழி மூலம் | | |
|---|---|---|---|---|
| | | சிங்களம் | ஆங்கிலம் | தமிழ் |
| கொழும்பு | 200 | √ | √ | √ |
| கண்டி | 120 | √ | √ | √ |
| மாத்தறை | 75 | √ | - | - |
| அனுராதபுரம் | 75 | √ | - | - |
| யாழ்ப்பாணம் | 75 | - | - | √ |
| மட்டக்களப்பு | 75 | - | - | √ |
| குருணாகல் | 45 | √ | - | - |
| பதுளை | 40 | √ | - | √ |
| இரத்தினபுரி | 45 | √ | - | - |

ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகளின் எண்ணிக்கை மற்றும் பிராந்தியங்களிற்கான கற்பித்தல் மொழி மூல விபரங்கள் மேல்வருமாறு.

1. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் சட்டக் கற்கைகள் துறையால் நடாத்தப்படுகின்ற மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை **10 நவம்பர் 2022 இல் இருந்து 10 டிசம்பர் 2022 வரை** பெற்றுக்கொள்ள முடியும்.
2. 18 வயது அல்லது 18 வயதிற்கு மேற்பட்ட பின்வரும் கல்வித் தகைமைகள் அல்லது தொழில் ரீதியான தகைமைகள் கொண்டிருக்கும் எந்த நபரும் அனுமதிக்கான தகுதி வாய்ந்தவர்கள் ஆவர்.
   i. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் (உயர் தரம்) மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் ஒரு பிரிவை சார்ந்த பாடங்களில் சித்தி (புதிய பாடத்திட்டத்தின் கீழ் 3 பாடங்கள்), **அல்லது**
   ii. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் (உயர் தரம்) ஒரே பிரிவை சார்ந்த நான்கு (04) பாடங்களிலும் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 4 பாடங்கள்) அவற்றில் 3 பாடங்களிற்கான சித்தியை ஒரே அமர்வில் பெற்றிருத்தல், **அல்லது**
   iii. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் SLQF மட்டம் 2 இல் முப்பது (30) அல்லது அதற்கு மேற்பட்ட பாடக்கற்றல் அளவெண்களைக் கொண்டிருத்தல், **அல்லது**
   iv. இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 4 இற்கு நேரடியாக உட்பிரவேசிக்கலாம் என்பதுடன் அவர்கள் மட்டம் 3 இற்கான தேர்வுப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவர். இவர்கள் 2022/2023 கல்வி வருடத்தில் ஏனைய தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுடன் பாடத்திட்டத்திற்கு தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர். எனினும், புதிய பாடத்திட்டத்தின் கீழ் மட்டம் 4 இற்கான கல்வி நடவடிக்கைகள் 2023/2024 கல்வியாண்டில் ஆரம்பிக்கப்படும். ஆகவே, சட்டத்தரணிகள் தமது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2023/2024 கல்வி ஆண்டு வரை காத்திருத்தல் வேண்டும், **அல்லது**
   v. திறந்த பல்கலைக்கழகத்தின் செனட் சபையினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய இதற்கு சமனான அல்லது மேலான தகுதிகளைக் கொண்டிருத்தல்.

   * 12 டிசம்பர் 2022 முதல் 8 ஜனவரி 2023 வரை தெரிவுப் பரீட்சை அனுமதி அட்டைகளை தரவிறக்கம் செய்துகொள்ளலாம். தகவல் தொழில்நுட்ப உதவி அலகு, கட்டணம் செலுத்திய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் ஆகிய இரண்டின் ஊடாகவும் தரவிறக்கம் செய்துகொள்வதற்கான இணைப்பினை (Link) அனுப்பி வைக்கும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த பின்னர் அனுமதிகள் செயன்முறைப்படுத்தப்படும்.
3. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான தெரிவு, போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். தேர்வுப் பரீட்சை 08 ஜனவரி 2023 இல் நடைபெறும்.
4. விண்ணப்பபடிவங்கள் இணையத்தளங்களில் (நிகழ்நிலை) மாத்திரமே காணப்படுவதுடன் அவ்விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் விண்ணப்பதாரிகளே முழுபொறுப்புடையோர் ஆவார். எக்காரணத்தின் மீதும் ஏனைய முறைகளிலான விண்ணப்பங்கள் (ஆவண வடிவிலான) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் எப்பிராந்திய கற்கை நிலையத்தில் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர விரும்புகின்றனர் என கட்டாயமாக குறிப்பிடல் வேண்டும். எவ்வித சந்தர்ப்பங்களின் கீழும் பதிவு செய்யப்பட்ட மாணவர் ஒருவர் தான் தெரிவு செய்த பிராந்திய நிலையத்தை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்படும் போதோ அல்லது அதற்கு பின்னரோ மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.
   i. விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிடத்திற்கு மிகவும் அருகாமையில் உள்ள பிராந்திய நிலையத்தை தெரிவு செய்ய வேண்டும்.
   ii. பதிவின் போது, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிடத்தை நிரூபிக்கும் பொருட்டு கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்டு மாவட்ட செயலாளரால் அங்கீகரிக்க-ப்பட்ட வாக்காளர் பதிவின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.
   iii. கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்டு மாவட்ட செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட வாக்காளர் பதிவின் நகலை சமர்ப்பித்தலானது நிகழ்ச்சித் திட்டத்தில் உள்வாங்கப்படுவதற்கான கட்டாயத் தேவைப்பாடு ஆகும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நிகழ்ச்சித் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள்.
   iv. விண்ணப்பதாரிகள் தாம் நிகழ்ச்சித் திட்டத்தை தொடர விண்ணப்ப படிவத்தில் தெரிவு செய்த பிராந்திய நிலையத்தில் தேர்வுப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டும்.
6. விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் **https://www.ou.ac.lk** இல் உள்ள கையேட்டை வாசிக்கவும்.
7. பந்தி 5 இற்கு அமைய விண்ணப்பதாரி ஒருவர் விண்ணப்பப் படிவம் அல்லது ஆவணங்கள் தொடர்பில் அளித்துள்ள தரவுகள் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் கருதும் பட்சத்தில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை பதிவின் போது நிகழ்ச்சித் திட்டத்திற்குள் உள்வாங்காது இருப்பதற்கான சகல உரிமைகளையும் இலங்கை திறந்த பல்கலைக் கழகம் கொண்டுள்ளது.
8. மேலதிக விபரங்களிற்கு பொது தகவல் நிலைய காரியாலயத்தின் 011 2881327/ 256 எனும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் 0112 881 432 / 0716 368 241



**நிகழ்நிலையில் மட்டும் விண்ணப்பிக்கவும்**

**விண்ணப்பப்படிவக் கட்டணம் 5000/=**

**எமது வலைத்தளத்தின் (online) மூலம் விண்ணப்பிக்கவும் : https://reginfo.ou.ac.lk/applyonline/**

**நிகழ்நிலை (online) விண்ணப்பப்படிவங்களை 10.11.2022 இல் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.**

**விண்ணப்ப இறுதித் திகதி : 10.12.2022**

கிடைக்கக்கூடிய புலமைப்பரிசில்கள் - மஹாபொல புலமைப்பரிசில், பல்கலைக்கழக மாணவர் உதவிப்பண கொடுப்பனவு, விரிவாக்கல் உதவிப்பண கொடுப்பனவு, உள்ளீர்ப்பு உதவிப்பண கொடுப்பனவு (மேலதிக விபரங்களிற்கு மாணவர் விவகாரங்கள் மற்றும் நலச்சேவைகள் பிரிவினைத் தொடர்பு கொள்ளவும்- 0112881374)

பதிவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.